**உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை – திரு ரா.செல்வராஜ் பி.இ.,**

ந.க.எண்.594/2018/திஉ.திகு–2 நாள் 30.4.2018

பொருள் . கட்டிடம்–திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி–திருச்சிராப்பள்ளி மாநகராட்சி–பொன்மலைக் கோட்டம்–புதிய வார்டு ஜே–பிளாக் எண். 19–ந.அ.எண்.2/5, 3/3, 1/6, 7, 8, 9, 10, 11–பிராட்டியூர் கிராமம்–புல எண். 151/6சி, 152/1, 153/8, 9பி, 9சி, 9டி, 9 ஈ மற்றும் 9 எப்–ராமச்சந்திரா நகர் செட்டியாபட்டி ரோட்டில் அமைந்துள்ள இடத்தில் 9372.41 ச.மீ பரப்பளவு உள்ள மனைக்கு ஒப்புதலும், மற்றும் ஸ்டில்ட் தளம், முதல் தளம், 2ம் தளம், 3ம் தளம் மற்றும் 4ம் தளங்களில் ABCDE என்ற பிளாக்குகளில் உத்தேச 184 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு கட்டிடம் கட்ட திட்ட அனுமதி அளிக்கப்பட்டது–கால நீட்டிப்பு உத்தரவு வழங்குதல்–தொடர்பாக.

பார்வை

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.எப்1/12629/2012 பொன் (மையம்) நாள் 2.4.2013
2. மனுதாரர் திரு வே.கைலாசம் (திரு ராதாகிருஷ்ணன் என்பவரின் பவர் ஏஜெண்ட்) என்பவரது விண்ணப்பம் நாள் 14.3.2018
3. அரசாணை எண்.22 மற்றும் 86 வீ.வ மற்றும் ந.பு.வ.துறை நாள் 25.1.08 மற்றும் 28.3.12
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009 பிஏ2 நாள் 16.4.2009.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26294/10 எல்ஏ2 நாள் 20.12.2010
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.8597/2013 பிஏ2 நாள் 19.6.2014.
7. திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண்.108 நாள் 26.12.2002.
8. உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.1797/2012 திஉ.திகு 2 நாள் 5.5.2015
9. தமிழ்நாடு அரசிதழ் எண்.86, பாகம் IV, Sec 2, page No.61 dated 30.3.2017
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 25437/2014 ஜி ஆர் நாள் 6.6.2017

------

உத்தரவு

திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டம், புதிய வார்டு ஜே, பிளாக் எண்.19, ந.அ.எண்.2/5, 3/3, 1/6, 7, 8, 9, 10, 11, பிராட்டியூர் கிராமம், புல எண்.151/6சி, 152/1, 153/8, 9பி, 9சி, 9டி, 9 ஈ மற்றும் 9 எப், ராமச்சந்திரா நகர் செட்டியாபட்டி ரோட்டில் அமைந்துள்ள இடத்தில் 9372.41 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு A to P என எல்லையிட்டு மனையின் ஒப்புதலும், அம்மனையில்

For SRI RANGAN BUILDER (P) LTD.

Managing Director

Scanned by CamScanner

Scanned by CamScanner

| Floor details | Block A | | Block B | | Block C | | Block D | | Block E | | Usage |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | FSI - Area | Non FSI - Area | FSI Area | Non FSI Area | FSI Area | Non FSI Area | FSI Area | Non FSI Area | FSI Area | Non FSI Area | |
| Stilt floor | -- | 829.87 | -- | 829.87 | -- | 877.59 | -- | 879.09 | -- | 649.49 | Car parking |
| First floor | 817.48 | -- | 817.48 | -- | 851.55 | -- | 850.15 | -- | 848.52 | -- | 46 flats |
| Second Floor | 817.48 | -- | 817.48 | -- | 851.55 | -- | 850.15 | -- | 848.52 | -- | 46 flats |
| Third floor | 817.48 | -- | 817.48 | -- | 851.55 | -- | 850.15 | -- | 848.52 | -- | 46 flats |
| Fourth floor | 817.48 | -- | 817.48 | -- | 851.55 | -- | 850.15 | -- | 848.52 | -- | 46 flats |
| Terrace floor | -- | 30.38 | -- | 30.38 | -- | 30.38 | -- | 30.38 | -- | 39.09 | --- |
| Total | 3269.92 | 860.25 | 3269.92 | 860.25 | 3406.25 | 907.97 | 3400.60 | 909.47 | 2594.08 | 688.58 | 184 flats |

மேற்கண்ட தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 6ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயலாணைக் கடிதத்தில் க.வ/ந.ஊ.இ. எண்.76/2014 என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி/திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பார்வை 8ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.1797/2012 திஉதிகு 2 நாள் 5.5.2015–ல் திட்ட அனுமதி எண்.73/2014 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1ல் கண்டுள்ள மனுதாரர்களின் விண்ணப்பத்தில் திட்ட அனுமதி காலம் 4.5.2018 உடன் முடிவடைவதால் திட்ட அனுமதிக்கு கால நீட்டிப்பு வழங்க கோரப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 3ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் செயலாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள்/சிறப்பு நிபந்தனைகளுடன் மற்றும் கீழ்காணும் கூடுதல் நிபந்தனையுடன், திட்ட அனுமதி காலத்தினை பார்வை 9 மற்றும் 10ல் கண்டுள்ள அரசிதழ் பிரசுரம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதத்தினைத் தொடர்ந்து, 5.5.2018 முதல் 4.5.2020 வரை கால நீட்டிப்பு செய்து உத்தரவிடப்படுகிறது.

For SRI RANGAN BUILDER (P) LTD.

Managing Director

Scanned by CamScanner

Scanned by CamScanner

கூடுதல் நிபந்தனை

அரசாணை எண்.17 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 5.2.2016ன்படி ஒரு கிலோ வாட் மின் சாரத்திற்கு குறைந்தபட்சம் 10 சமீ என்ற அளவில் மேல் தளப் பரப்பில் 1/3 பாகம் Solar photo voltaic panels அமைக்கப்பட வேண்டும்.

உறுப்பினர் செயலர்,
திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம்.

30/04/18

பெறுநர்

மனுதாரர் திரு வே.கைலாசம்,
(திரு ராதாகிருஷ்ணன் என்பவரின் பவர் ஏஜெண்ட்),
எண்.9 வார்னர்ஸ் ரோடு, கன்டோன்மெண்ட்,
திருச்சி 1.

நகல்

ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

For SRI RANGAN BUILDER (P) LTD.

Managing Director

Scanned by CamScanner

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டம் உதவி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு. எம். தயாநிதி, பி.எஸ்.ஸி.,எம்.பி.ஏ.,பி.எல்.,

ந.க.எண்.992/2012 /சப்1/(பொன்) நாள்29.08.2019

பொருள்: அனுமதி – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – பொன்மலை கோட்டம் – வார்டு 39, புதிய வார்டு ஜே, பிளாக் எண்.19. சர்வே எண். 2/5,3/3, 1/6.1/7.1/8.1/9.1/10.1/11. பிராட்டியூர் கிராமம், செட்டியாப்பட்டி, ராமசந்திரா நகர் மெயின்ரோடு என்ற இடத்திற்கு உள்ளூர் திட்டக்குழுமம் உத்திரவில் கண்டுள்ளபடி திட்ட அனுமதி அளித்து கட்டிட அனுமதி வழங்கப்பட்டது – கால நீட்டிப்பு உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. திரு. ஜி.கோபிகிருஷ்ணன், திரு. பி. ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு கட்டிட அனுமதி எண்.சப்1/308/2015 நாள்:22.05.2015.
2. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், திருச்சிராப்பள்ளி ந.க.எண்.1797/2012/தி.உ.தி.கு2, நாள் 05.05.2015.
3. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், திருச்சிராப்பள்ளி ந.க.எண்.594/2018/தி.உ.தி.கு2, நாள் 30.04.2018.
4. திரு.வே.கைலாசம், ராதாகிருஷ்ணன் என்பவரின் பவர்ஏஜென்ட் கால நீட்டிப்பு விண்ணப்பம், நாள்: 09.10.2018.
5. தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது ஒப்புதல் நாள் 05.12.2018.
6. மனுதாரின் விண்ணப்ப நாள் 28.08.2019

*****

**உத்தரவு:-**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டம் புதிய வார்டு ஜே, பிளாக் எண்.19, சர்வே எண். 2/5,3/3, 1/6.1/7.1/8.1/9.1/10.1/11. பிராட்டியூர் கிராமம், செட்டியாப்பட்டி, ராமசந்திரா நகர் மெயின்ரோடு என்ற இடத்திற்கு உள்ளூர் திட்டக்குழுமம் உத்திரவில் கண்டுள்ளபடி கட்டிட அனுமதி எண்.308/2015 நாள்22.05.2015 அனுமதி உத்தரவு வழங்கப்பட்டது. அதனுடைய அனுமதி காலமானது 04.05.2018 உடன் முடிவடைவதால், பார்வை 3ல் காணும் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்ட குழுமத்தின் வாயிலாக திட்ட அனுமதி காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, பார்வை 4ல் காணும் மனுதாரரின் விண்ணப்பத்தின் பேரில், தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது ஒப்புதலின்படியும், பார்வை6ல் கண்டுள்ள மனுதாரின் கடிதத்தில் மனைஒப்புதல் கட்டணம் ரூ3650/-, கட்டிட அனுமதி கட்டணம் ரூ 13,34,382/-, கட்டிட பாதுகாப்பு வைப்புத் தொகை ரூ 15,81,375/-. நாள் 28.08.2019 செலுத்தியுள்ளார். எனவே, உறுப்பினர் செயலர் நிபந்தனைகளுக்குட்பட்டு 05.05.2018 முதல் 04.05.2020 வரை கால நீட்டிப்பு செய்து இதன்மூலமாக உத்தரவு வழங்கப்படுகிறது.

29.8.2019

உதவி ஆணையர்
பொன்மலை கோட்டம்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

29/08/19.

பெறுநர்:- திரு.வே.கைலாசம்,
ராதாகிருஷ்ணன் என்பவரின் பவர் ஏஜென்ட்,
9, வார்னர்ஸ்ரோடு,
கண்டோன்மென்ட், திருச்சி

\\192.168.2.13\pon\F1 2015\17629 2012 renewal.doc

For SRI RANGAN BUILDER (P) LTD.

Managing Director

Scanned by CamScanner

Scanned by CamScanner

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

பொன்மலைக் கோட்ட உதவி ஆணையர், அவர்களின் நடவடிக்கைகள்

நிகழ்வு திரு.தி.ந. தனபாலன்

Proceedings of the Asst. Commissioner, PONMALAI zone, Tiruchirappalli City Corporation, Tiruchirappalli

Present: THIRU.T.N. DANABALAN

க.அ.எண் : 308/2015

க.வி.எண் : 992/2012

நாள்: :

Dated :

# கட்டிட அனுமதி

பொருள் : கட்டிட அனுமதி – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – பொன்மலைக் கோட்டம் – திரு/திருமதி. ஜி. கோபிகிருஷ்ணன், பி. ராதாகிருஷ்ணன் சாலை எண்/ டவுன் சர்வே எண். 1/6,1/7,1/8,1/9,1/10,1/11,3/3,, ராமசந்திரா நகர் மெயிறி ரோடு, வீதியில் கதவு.எண்.0 ல் புதிதாக கட்டிடம் கட்ட / கட்டிடத்தை புதுப்பித்துக் கட்ட / கூடுதலாக கட்டிடம் கட்ட / கட்டி முடித்த கட்டிடத்திற்கு வரைபட அனுமதி / வழங்குதல் – உத்திரவு பிறப்பித்தல்

பார்வை : 1. திரு/திருமதி. ஜி. கோபிகிருஷ்ணன், பி. ராதாகிருஷ்ணன் அவர்களின் 29-Oct-2012 தேதிய விண்ணப்பம்.

2. இரசீது எண்கள் 1125121059 தேதி 29-Oct-2012 செலுத்தப்பட்ட ரூ.468000.00
MWGWF D.D.No. 214355 Amount Rs. 891600 Date: 14/05/2015

3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.9862/10/பிஎ1 நாள். 25.05.10.

4. திட்ட அனுமதி எண்: 12 நாள். 05-May-2015

5. ஆணையர் அவர்களின் உத்திரவு நாள்: 19/05/2015

உத்திரவு /Order

சாலை எண்/ டவுன் சர்வே எண்.1/6,1/7,1/8,1/9,1/10,1/11,3/3,,ராமசந்திரா நகர் மெயிறி ரோடு, வீதி கதவு/மனை.எண் 0 ல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி புதிதாக கட்டிடம் கட்ட/கட்டிடத்தை புதுப்பித்துக் கட்ட /கூடுதலாக கட்டிடம் கட்ட / கட்டி முடித்த கட்டிடத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி 05/05/2015-ம் தேதி முதல் 04/05/2018-ம் தேதி முடிய 3 வருட காலத்திற்கு திரு/திருமதி. ஜி. கோபிகிருஷ்ணன், பி. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மேற்கண்ட கட்டிடத்திற்கு Solar water heating system அமைக்கப்பட வேண்டும்.

2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்தும் இடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அவ்வாறே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

For SRI RANGAN BUILDERS ...

(தலைவர்)

Managing Director

Scanned by CamScanner

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002ன்படியும் கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், கடைகள் மற்றும் குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9. அரசாணை எண்.341 ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்.3.11.2004ன் படி செப்டிக் டேங்கில் "U" ட்ரேப் அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly ash bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. இணைப்பில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் யாவும் பொருந்தும்

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல்நகலுடன் இவ்வாணையின் நகலும் ஒவ்வொரு வீட்டையும் வாங்குவோருக்கு வழங்கப்பட வேண்டும்.

கூடுதல் நிபந்தனைகள்

கட்டிடப்பணி நடைபெறும் பொழுது பணி செய்யும் வேலையாட்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பாதுகாப்பு குறித்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மனுதாரர் சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும்

கட்டுமானப் பொருட்கள் தரம், கட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு பணி மேற்கொள்ளும் பொறியாளரும் கட்டிட உரிமையாளரும் பொறுப்பாவார்கள்

O/C

உதவி ஆணையர்
பொன்மலைக் கோட்டம்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

பெறுவர் :

திரு/ திருமதி ஜி. கோபிகிருஷ்ணன், பி. ராதாகிருஷ்ணன்

3, முதல் தளம், 60, 3வது கிராஸ் தெரு
கஸ்தூரிபா நகர், அடையாறு
சென்னை 0

For SRI RANGAN BUILDER (P) LTD.

Managing Director

Scanned by CamScanner

Scanned by CamScanner